அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

1. ஆணையர், பள்ளிக் கல்வி
   ஆணையரகம், டி.பி.ஐ. வளாகம்,
   சென்னை – 600 006.
2. இயக்குநர்,
   மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம்,
   சென்னை–6.

ந.க.எண். 022205 /பி1/2022 நாள் : 17.11.2022

மதிப்பிற்குரிய ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பகுதி 1–ல் தமிழ் மொழிப்பாடம் அல்லாத பிற மொழிப்பாடம் தேர்வெழுத தகுதியான மாணவ / மாணவியர்களின் விவரம் அனுப்பி வைக்கக் கோருதல் – சார்பு

பார்வை :
1. தமிழ்நாடு அரசிதழ் எண்.136, நாள்.12.06.2006
2. சென்னை–6, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.18640/எப்1/06, நாள்.17.06.2006.
3. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.72716/சி5/இ2/2014, நாள்.03.06.2014.
4. அரசாணை (நிலை) எண்.232, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள்.08.11.2017.
5. அரசாணை (நிலை) எண்.37, பள்ளிக் கல்வி (கஆப) துறை, நாள்.06.03.2018.
6. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்போராணை எண்.W.P.No's.28032, 28033, 33351, 33352, 44780 of 2016, W.P.No's.1510, 1511, 5666, 5667, 24850 of 2017, W.P.No.1546 of 2018 and W.A.No.151 of 2017, நாள்.23.09.2019.

******

பார்வை 1–ல் காணும் அரசிதழ் மற்றும் பார்வை 2 மற்றும் 3–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படியும், மார்ச் 2016 முதல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் பகுதி 1–ல் தமிழ் மொழி கட்டாயம் முதல் மொழிப் பாடமாகக் கொண்டு தேர்வெழுதும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுவருகிறது.

பார்வை 6–ல் காணும் சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான பத்தாம் வகுப்பு தேர்வுகளில் சிறுபாண்மையினர் மொழிப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பகுதி–Iல் அவரவர் தாய்மொழிகளில் தேர்வெழுத அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது பகுதி –Iல் தமிழ் மொழிப்பாட விலக்கு வழங்கிய நீதிமன்ற தீர்ப்பாணையின்படியான காலம் முடிவடைந்துள்ளது.

எனவே, நடைபெறவுள்ள ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணவர்கள் பகுதி 1–ல் தமிழ் மொழிப்பாடம் கட்டாயமாக தேர்வெழுதும் வகையில், மாணாக்கரது பெயர்பட்டியல் (Nominal Roll Data) கல்வி மேலாண்மை தகவல் அமைப்பிலிருந்து (EMIS – Education Management Information System) பெறுவதற்கு **14.11.2022 முதல் 30.11.2022 வரை** கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது

பெயர்ப்பட்டியலைக் கொண்டு முகப்புத் தாள் அச்சடித்தல் மற்றும் வினாத்தாள் அச்சடித்தல் உள்ளிட்ட தேர்வு முன்பணிகள் உடன் துவங்கவுள்ளதால், பார்வை 4 மற்றும் 5–ல் காணும் அரசாணைகளின்படி, ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு, பகுதி 1–ல் தமிழ் மொழிப்பாடம் அல்லாத பிறமொழிப்பாடம் தேர்வெழுத தகுதியான மாணாக்கர்களின் விவரங்களை இணைப்பில் காணும் பட்டியலின்படி பள்ளிகளிலிருந்து பெற்று **20.12.2022–க்குள்** இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், தங்களால் பரிந்துரைக்கப்படும் மாணவர்களுக்கு மட்டுமே பகுதி 1 மொழிப்பாடத்தில் தமிழ் பாடம் விலக்கு அளிக்கப்பட்டு, பிற மொழிப்பாடத்தில் தேர்வெழுத அனுமதிக்கப்படும் என்பதனால், தகுதியுள்ள மாணவர்களின் பட்டியலை தங்களின் மேற்பார்வையில் தயாரித்து வழங்கிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**// இது மிகவும் அவசரம் //**

**இணைப்பு :–**
பட்டியல்

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

<u>பட்டியல்</u>

| வ. எண் | கல்வி மாவட்ட எண் மற்றும் பெயர் | பள்ளி எண் (DGE CODE) மற்றும் பெயர் | UDISE CODE | மாணவர் / மாணவியரின் பெயர் | மாணவர் / மாணவியரின் EMIS NUMBER | தாய் மொழி | ஏற்கனவே பயின்ற மாநிலம் / வாரியம் | தற்போது பயிலும் பள்ளியில் சேர்ந்த வகுப்பு | 2023, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி 1–ல் தேர்வெழுதவுள்ள பிற மொழிப்பாடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |